

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.04.2025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு168, கத்திப்பாரா சாலை, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், ரூ.44.70 இலட்சம் மதிப்பீட்டில் 2 புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு. மகேஷ் குமார், துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ் (அடையாறு), எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எம்.கோமளவள்ளி ஏற்பாட்டில் – சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில்

# முதல்வர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் பங்கேற்பு! தி.மு.தனியரசு தலைமை!

சென்னை, ஏப். 10 -

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கழக தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (10.4.2025 வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில், திருவொற்றியூர் கிளாஸ் பேக்டரி அருகில் நடைபெறுகிறது.

இப்பொதுக் கூட்டத்திற்கு 7வது வட்டக் கழக செயலாளர் த.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றுகிறார்.

சுகந்தா முனுசாமி, எம்.மாலதி, இ.அன்னம்மாள், வி.புஷ்பகலா, ஆர்.விக்டோரியா, எம்.பாத்திமா, டி.ருக்கு, ஆர்.சித்ரா, எஸ்.சுகந்தி பாய், ஆர்.துளசி ராஜேந்திரன், கே.விஜயலட்சுமி, எம்.ரத்தினமாலா, அமுதா சதாசிவம், எஸ்.கலைச்செல்வி, ஆர்.சுதா, வி.சரஸ்வதி, எஸ்.சுதா, எஸ்.தாமரை, ஜெ. ஜெயந்தி, டி.லலிதா, எஸ். சரஸ்வதி, கே.அனந்தநாயகி, கே.ராணி, எஸ். கீதா, ந.பவானி, ஜெ.சிவகாமி, இ.பூங்கொடி, டி.ஜெயா, க.சாமு ண்டீஸ்வரி, சுமித்ரா, சௌமியா பேகம், ஆர்.ஹேமாவதி, குறிஞ்சி எஸ்.கணேசன், என்.சுந்தரமூர்த்தி, ஆர். சி.ஆசைத்தம்பி, எம். வி.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்ச்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வி.சதீஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், ஆர். ரஜினி பாபு, ஒய்.ரஜினி நந்தி, டி.டி.எம்.பாபு, ப.சந்தான கிருஷ்ணன், ஆர். டில்லி, ஒய்.பழனிவேல், அ. அப்துல் சலீம், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், எஸ்.பாஸ்கர், பி. எஸ்.சைலஸ், ம.ஜெயராமன் உள்ளிட்ட பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவிற்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளரும் 1வது மண்டலக் குழு தலைவருமான தி.மு.தனியரசு தலைமை வகிக்கிறார்.

இப்பொதுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஹெலன் டேவிட்சன், குமரி விஜயகுமார், டாக்டர் பி.எம்.யாழினி, ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.கோமளவள்ளி சிறப்பாக செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் வை.மா.அருள்தாசன், ஏ.வி.ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன், ஜி.தயாளன், சோழவரம் மீ.வே.கருணாகரன், ஜி. ராஜேந்திரன், சி.அற்புதராஜ், வீ.கண்ணதாசன், ஜி.சந்திர போஸ், வீ.கவி கணேசன்,

ஆர்.பத்மநாபன், மிசா பா.மதிவாணன், வி.ராமநாதன், மு.ராஜேந் திரன், டி.ராம கிருஷ்ணன், பி. அறிவழகி பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், ஆர்.சாந்தி பக்தன், என்.பரந்தாமன், ஜெ. ஜெய் மதன் மற்றும் கழக முன்னோடிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எம்.அம்மு நன்றி கூறுகிறார்.

### எழும்பூர் தாய்–சேய் நல மருத்துவமனையிலேயே

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மிக அதிதீவிர மருத்துவப் பரிசோதனைகள்!

### சட்டப்பேரவையில் - இ.பரந்தாமன் வலியுறுத்தல்!



சென்னை, ஏப்.10-

சட்டப்பேரவையில் எழும்பூர் தொகுதி கழக உறுப்பினர் இ.பரந்தாமன், எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனையிலேயே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மிக அதிதீவிர மருத்துவப் பரிசோதனைகளும், சிகிச்சைகளும் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :

கடந்த கூட்டத்தொடரில் கேள்வி நேரத்தின் போது எனது எழும்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 3 மின் தூக்கிகள் பழுதடைந்திருக்கிறது என்பதை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேள்விநேரத்தின்போது வைத்திருந்தேன். அவற்றை ஏற்று ஒரு கோடியே 13 இலட்சத்தில் 3 மின் தூக்கிகளை இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல, தாய்சேய் நல மருத்துவமனை எழும்பூர் தொகுதியில் இருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய கர்ப்பிணி தாய்மார்கள் மிக அதிதீவிர சிகிச்சை அல்லது பரிசோதனை செய்வதற்கு சிலரை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். எனவே, அது எத்தகைய அதிதீவிர பரிசோதனை என்பதைக் கண்டறிந்து அவற்றிற்கு தாய்சேய் நல மருத்துவமனையிலேயே அத்தகைய பரிசோதனைகளை செய்ய முடியுமா என்பதை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** எழும்பூரிலிருந்து ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு கர்ப்பிணி தாய்மார்களை அழைத்து வருவது என்பது கடந்த காலங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்று. அதை தவிர்த்து அந்த வளாகத்திலேயே அந்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்குரிய கட்டமைப்பை ஏற்படுத்திட வேண்டுமென்று அறிவுறுத்தி இருக்கிறோம். மிக விரைவில் அது ஏற்படுத்தப்படவிருக்கிறது என்பதைத் தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றியம் காரணோடை ஊராட்சி, காரணோடை பஜார் பகுதியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு காரணமாக பாசிச பா.ஜ.க அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ரவி அவர்களின் செயல்பாட்டினை எதிர்த்து கழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதி மன்றம் சார்பாக வரசாற்றுச் சிறப்புமிக்க தீர்பினை பெற்றுத் தந்த திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வர் கழக தலைவர் அவர்களை பாராட்டும் வகையில் காரணோடை பஜாரில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர். உடன் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கே.வீரம்மாள், இரா.விஜயன், நா.பரசுராமன் மற்றும் காரணோடை கிளை கழக செயலாளர்கள், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள். கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று (09.04.2025) திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வார்டு 74, ஓட்டேரி பாஷ்யம் 1வது தெருவில் உள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான தங்கச்சாலை தெருவில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை மூலம் நியாய விலை கடை கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு வசித்து வந்த ஆறு ஆக்கிரமிப்புதாரர்களுக்கு கௌதமபுரம் திட்டப் பகுதியில் புதிய குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, வட்டக் கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ரூ.1.32 கோடியில் புதுப்பிக்கப்பட்ட

# தேவநேயப் பாவாணர் அரங்கம்! அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

### 34 முதுகலை ஆசிரியர்கள் உள்பட 56 பேருக்கு பணி நியமண ஆணைகளும் வழங்கினார்!

சென்னை, ஏப்.10-

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட தேவநேயப்பாவாணர் அரங்கத்தை திறந்து வைத்து, 34 முதுகலை ஆசிரியர்கள் உள்ளிட்ட 56 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (9.4.2025) ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட தேவநேயப் பாவாணர் அரங்கத்தை திறந்து வைத்து, 34 முதுகலை ஆசிரியர்கள் உள்ளிட்ட 56 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டடத்தின் முதல் தளத்தில் உள்ள தேவநேய பாவாணர் அரங்கு ரூ1.32 கோடியில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து தொழில்நுட்ப வசதியுடன் கூடிய குளிர்சாதன வசதி கொண்ட இந்த அரங்கத்தினை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று திறந்து வைத்தார். இவ்வரங்கம் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய 280 நபர்கள் அமரும் வகையில் இருக்கை வசதிகள், Live Camera உட்பட நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய ஒலி ஒளி அமைப்பு, LED Video Wall மற்றும் உணவுக் கூடம் ஆகிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 34 முதுகலை ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 11 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III, 10தட்டச்சர் மற்றும் ஒரு நூலகர் மற்றும் தகவல் உதவியாளர் நிலைII, மொத்தம் 56 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் பணியில் இருக்கும் போது காலமான ஆசிரியர்களின் குழந்தைகள், தொழிற்நுட்பக் கல்வி படிப்புகளான பொறியியல், வேளாண்மை, செவிலியர், மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டப்படிப்பு (4 ஆண்டுகள் அதற்கும் மேற்பட்டவை) மற்றும் பட்டயப் படிப்பு பயில்வோருக்கு ஆசிரியர் நல நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2024-2025ஆம் கல்வியாண்டிற்கு 12 மாணவர்கள் பயன்பெற உள்ளார்கள். அதில் முதற்கட்டமாக 4 மாணவர்களுக்கு தலா ரூ.50000 வீதம் மொத்தம் ரூபாய் 2 இரண்டு இலட்சத்துக்கான கல்வி உதவித்தொகையினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் பொது நூலகத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) முனைவர் த.ராஜேந்திரன், பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டுநலப்பணித் திட்டம்) திருமதி சசிகலா, பொது நூலகத் துறை இணை இயக்குநர் திரு. இளங்கோ சந்திரகுமார், துணை இயக்குநர் திருமதி தனலட்சுமி, மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக தலைவர் - மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா! ராஜா அன்பழகன் எம்.சி. தலைமையில்!

# சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் மின்னொளி கிரிக்கெட் போட்டி!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ வெற்றிபெற்ற அணிகளுக்கு மொத்தம் ரூபாய் 1,10,000 வழங்கினார்!

சென்னை, ஏப்.10-

கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தி.நகர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 32 அணிகள் பங்கேற்ற கிரிகெட் போட்டிகளில் தேர்வான நான்கு அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி மாவட்ட இளைர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி தலைமையில் அசோக்நகர் மேல்நிலை பள்ளி மைதானத்தின் நடைபெற்றது. வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு ரூ 50,000 இரண்டாம் பரிசு ரூ 30,000 மூன்றாம் பரிசு ரூ 20,000 நான்காம் பரிசு ரூ 10,000 தவிர கோப்பைகள் மற்றும் மெடல்களை மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணை செயலாளர் எஸ்.ஜோயல் பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ்.முரளி பங்கேற்றனர்.

135வது வட்ட செயலாளர் எம்.எஸ்.பழனி முன்னிலையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.உமாசங்கர், தினேஷ் மாணிக்கம், த.விக்னேஷ்வரன், எ.அஸ்வின் குமார், சி.பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் பகுதி அமைப்பாளர்கள் ஆ.மணிரத்தினம், கா.மணிகண்டன், டி.ஜெகதீஷ்பாபு, சீ.வி.திவான்குமார், க. அருண்குமார், இரா.கருணாகரன் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தி.நகர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 32 அணிகள் பங்கேற்ற கிரிகெட் போட்டிகளில் தேர்வான நான்கு அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி மாவட்ட இளைர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி தலைமையில் அசோக்நகர் மேல்நிலை பள்ளி மைதானத்தின் நடைபெற்றது. வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு ரூ 50,000 இரண்டாம் பரிசு ரூ 30,000 மூன்றாம் பரிசு ரூ 20,000 நான்காம் பரிசு ரூ 10,000 தவிர கோப்பைகள் மற்றும் விருதுகளை மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு வழங்கினார்.